# செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.80/2023 நாள் : 12.10.2023

## மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (12.10.2023) மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (12.10.2023) சென்னை கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில், மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களிடையே ஏற்படுத்திடும் வகையில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

நீர் மேலாண்மை இயக்கத்தின் கீழ், நீராதாரம் காத்தல், மழைநீர் சேகரிப்பு, பாரம்பரிய ஏரி ஆதாரங்கள் / ஏரிகளை புதுப்பித்தல், நீர்நிலை மேம்பாடு, மறு பயன்பாடு, ஆழ்துளைக் கிணறு மீள் நிரப்புதல் ஆகியவற்றின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக வடகிழக்குப் பருவமழை துவங்கும் முன்னர் அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் உள்ள மழைநீர் கட்டமைப்புகளை புனரமைக்கும் பணிகள் மேறகொள்ளப்பட்டு வருகிறது. மேலும், குடியிருப்புகள், தனியார் மருத்துவமனைகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், பள்ளி,

கல்லூரி வளாகங்கள் மற்றும் வணிக வளாகங்களில் மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகள் அமைப்பதற்கும், ஏற்கனவே உள்ள மழைநீர் கட்டமைப்புகளை புனரமைப்பு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த வருடம் பொதுமக்களிடையே மழைநீர் சேகரிப்பின் அவசியம் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரித்தல் மற்றும் கட்டமைப்புகளை புனரமைப்பு செய்தல் போன்றவை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையில் சென்னை குடிநீர் வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சென்னை மாநகர பேருந்துகள், சென்னை குடிநீர் வாரியத்தின் ஒப்பந்த அடிப்படையிலான குடிநீர் விநியோக லாரிகள் மற்றும் வாரியத்தின் வாகனங்களில் மழைநீர் சேகரிப்பு முறைகள் மற்றும் பராமரிப்பின் முக்கியத்துவம் குறித்த Stickers காட்சிப்படுத்தப்படும். மேலும், மெட்ரோ ரயில்கள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் பேருந்து நிறுத்தங்கள், வணிக வளாகங்கள் ஆகியவற்றில் மழைநீர் சேகரிப்பு தொடர்பான விளம்பர பதாகைகள் வைக்கப்படும்.

சென்னை குடிநீர் வாரியத்தின் அனைத்து நுகர்வோர்களுக்கும் மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்த குறுஞ்செய்தி வாட்ஸ்அப் (whatsapp) மூலமாக அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. FM சேனல்கள் மூலம் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு தகவல்கள் வெளியிடப்படும். மேலும், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு

மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிப்பது தொடர்பாக கூடுதல் விவரங்கள் பெறுவதற்கு பொதுமக்கள் தொலைபேசி எண்.28458899-ஐ தொடர்பு கொள்ளலாம். சென்னை குடிநீர் வாரியத்தில் தலைமை அலுவலகத்தில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு மற்றும் விவரங்கள் தெரிவிப்பதற்காக சிறப்பு பிரிவு செயல்படும். மேலும் கூடுதல் விவரங்களுக்கு சென்னை குடிநீர் வாரியத்தின் இணையதள முகவரி https://cmwssb.tn.gov.in, முகநூல் https://www.facebook.com/CMWSSB, https://twitter.com/CHN_Metro_Water, இன்ஸ்டாகிராம் https://www.instagram.com/chennaimetrowater என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

விடுமுறை நாட்களில் சென்னையில் உள்ள பிரதான சாலைகளில் மழைநீர் சேகரிப்பு குறித்த கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வினை மாணவர்களிடையே ஏற்படுத்திடும் வகையில் கல்லூரி மாணவர்களைக் கொண்டு மாரத்தான் நடத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வின் மூலம் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை பொதுமக்களிடையே கொண்டு செல்வதில் சென்னை குடிநீர் வாரியம் பெரும்பங்காற்றி வருகிறது. இந்நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கி மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை உணர்ந்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை முறையாக பராமரித்திட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.கே.மோகன், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன்,இ.ஆ.ப., நிலைக்குழு தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு, மண்டலக் குழுத்தலைவர் திரு.கு.பி.ஜெயின், 101-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.விட்டல்டா கோவிந்தராஜ், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர் திரு.எம்.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர் திரு.இரா.சிவமுருகன், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்